DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.360 /2025

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஜாபர்அலி |
| Father's / Husband Name | : | சிக்கந்தர் |
| Village | : | கம்பம் |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25 day of March 2026.

புகார்தாரர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

1) புகார்தாரரை எனக்கு தெரியும். அவர் கந்துவட்டி தொழில் நடத்தி வருகிறார். 6 வருடத்திற்கு முன்பு புகார்தாரரிடம் ரூ.50,000/- வட்டிக்கு பணம் கேட்டேன். புகார்தாரர் எனக்கு ரூ.45,000/- பணம் கொடுத்தார். அதற்கு பொறுப்புக்காக எனது Axis வங்கியின் காசோலையை கையொப்பம் மட்டும் செய்து இராதாகிருஷ்ணனிடம் கொடுத்தேன். தினமும் ரூ.500/- வீதம் 100 நாட்கள் பணம் கொடுத்துள்ளேன். நான் பணத்தைக்கொடுத்துவிட்டு, காசோலையை கேட்டபோது, எடுத்து தருவதாக உறுதி கூறினார். பின்பு புகார்தாரரிடம் 02.07.2025ம்தேதியன்று நான் ரூ.2 லட்சம் பணம் வாங்கியதாகவும், காசோலை கொடுத்ததாகவும் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரரிடம் நான் பணம் வாங்கவில்லை, வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நான் Hello chips & Spices என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் Axis வங்கி கம்பம் கிளையில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் சரிதான். எனது கடையும், Axis வங்கியும் குமுளி ரோட்டில் நேருக்கு

நேராக உள்ளது என்றால் சரிதான். எனது கணக்கு நடப்பு கணக்கு என்றால் சரிதான். எனது நடப்பு கணக்கை கடை பெயரில் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது கடை காந்தி சிலை அருகே உள்ளது என்றால் சரிதான். காந்தி சிலையில் அருகே சுருளிப்பட்டிக்கு செல்லும் மினி பஸ் ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். எனது கடை பின்புறம் பஸ் ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். சுருளிப்பட்டி பஸ் ஸ்டாண்டிற்கும் எனது கடைக்கும் 500 மீட்டர் தூரம் உள்ளது. எந்த வருடத்தில் நான் கணக்கு தொடங்கினேன் என்றால் பத்து வருடம் இருக்கும்.

2) எந்த வருடத்தில் வங்கி கணக்கை முடித்தேன் என்றால் 11.04.2015 ல் முடித்தேன். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் 3 வது பாராவில் புகார்தாரரிடம் எந்த தேதியில் கடன் வாங்கினேன், எந்த காசோலை வழங்கப்பட்டது சட்டப்படியான விபரங்கள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரங்களை புகார்தாரர் புகார் மனுவில், அறிவிப்பிலும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ல் Account closed என்ற காரணம் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது தரப்பில் எனது வங்கி கணக்கானது inoperative என்ற காரணம் குறிப்பிட்டு மூடப்பட்டதாக கூறப்பட்டது என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு பணத்தை செலுத்தியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) எந்த தேதியிலிருந்து, எந்த தேதி வரை நான் பணம் செலுத்தினேன் என்றால் ஞாபகமில்லை. கொரனா காலத்திற்கு முன்பு பணம் கொடுத்து முடித்துவிட்டதாக எனது பதில் அறிவிப்பில் கூறியுள்ளேன் என்றால் 6 வருடத்திற்கு முன்பு பணத்தை கொடுத்து முடித்துவிட்டேன். மேற்படி 6 வருடமாக புகார்தாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பினேனா என்றால் இல்லை. புகார்தாரர் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பணம் கொடுத்ததற்கு புகார்தாரரிடம் எழுத்து பூர்வமான ஆவணம் பெற்றேனா என்றால் இல்லை. நான் பதில் அறிவிப்பிலும், எனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது கூறப்பட்ட விபரங்களுக்கு இடையே முரண்பாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் ரூ.2 லட்சம் பணம் வாங்கிக்கொண்டு, நான் ரூ.50 ஆயிரம் தான் வாங்கினேன் என்று பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டிய நபர் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.25 19:58:30 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam